முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

முன்னிலை : திரு.ஆர்.சண்முகசுந்தரம், பி.காம்., எல்.எல்.பி.,
முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.

2023-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20-ஆம் தேதி வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.156/2022**

(CNR No.TNKR01-001252-2022)

சிவசாமி ...வாதி

/எதிர்/

1) செல்லம்மாள்
2) கவிதா
3) இளவர் அகில் நிதின் (வயது 10)
4) இளவர் அஸ்வின் ராம் (வயது 10) ...பிரதிவாதிகள்

(3, 4 இளவர் வாதிகள் சார்பாக அவர்களது இயற்கை காப்பாளரும், தாயாருமான 2ம் வாதி கவிதா மூலமாக)

இவ்வழக்கு கடந்த 06.07.2023-ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.பால்சாமி, இளவர் 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர்/நீதிமன்ற காப்பாளர் M.S.விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், இரு தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## தீர்ப்புரை

வாதி தரப்பில் இவ்வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக, வாதிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.10,30,645/-மும், அதற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை பின்வட்டியும் இறந்துபோன என்.தனபால் என்பவரின் ஆஸ்திகளிலிருந்து பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமென்றும் மற்றும் வழக்கின் செலவுத் தொகையும் செலுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பு வழக்குரை சுருக்கம்** :-

2) இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் மகனும், 2ம் பிரதிவாதியின் கணவருமான ஒரு என்.தனபால், த/பெ. நாட்ராயன் ஆவார். இவ்வழக்கு 3, 4 பிரதிவாதிகள் மேற்சொன்ன தனபால் மற்றும் 2ம் பிரதிவாதியின் இளவர் மகன்கள் ஆவார். மேற்படி தனபால் பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு 23.10.2019 அன்று இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன தனபால் என்பவருக்கும், வாதிக்கும் நல்ல பழக்கம். கடந்த 04.04.2019-ஆம்

தேதி இறந்துபோன தனபால் வாதியின் வீட்டிற்கு வந்து ரூ.7,50,000/- அவரது அவசர குடும்ப செலவிற்காகவும், வியாபார செலவிற்காகவும் கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.25 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக் கொண்டும், மேற்படி தொகையை வாதிக்கோ அல்லது அவரது உத்திரவு பெற்றவருக்கோ திருப்பி செலுத்துவதாக ஒப்புக் கொண்டு அன்றையதினமே மேற்சொன்ன தனபால் வாதி பெயருக்கு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார். கடனுறுதிச் சீட்டின்கீழ் பெற்ற கடன் தொகைக்கு கடந்த 30.09.2019-ஆம் தேதி வரையிலான வட்டியை மேற்படி தனபால் வாதிக்கு செலுத்தி வந்தார். பின்னிட்டு தனபால் பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு 23.10.2019 அன்று இறந்துவிட்டார். மேற்படி தனபால் இறந்த பிறகு வாதி பலமுறை பிரதிவாதிகளை நேரில் சந்தித்து கேட்டும், பிரதிவாதிகள் தாவா கடனுறுதிச் சீட்டின்படி அசல் மற்றும் வட்டித் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதால் அத்தொகைகளை கேட்டு வாதி 26.02.2022 அன்று வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிறகும் பிரதிவாதிகள் எந்த தொகையும் செலுத்தாததால் வாதி தாவா கடன் தொகையை வட்டியுடன் செலுத்தக் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார்.

3) 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற காப்பாளர் தாக்கல் செய்த எதிர்வழக்குரை சுருக்கம்</u> :-**

4) வழக்குரை விபரங்கள் மறுக்கப்படுகிறது. இந்த பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும். வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளும் இந்த பிரதிவாதிகளால் மறுக்கப்பட்டுள்ளது. மாறாக இறந்துபோன என்.தனபால் சாட்சி மற்றும் எழுத்தர் முன்னிலையில் தாவா கடனுறுதிச் சீட்டை எழுதிக் கொடுத்ததாக வாதி வழக்குரையில் குறிப்பிடவில்லை. தாவா கடனுறுதிச் சீட்டு உண்மையானது என நிரூபணம் செய்ய எவ்வித ஆவணங்களும் இல்லை. இறந்துபோன என்.தனபால் மேற்படி கடன் தொகையை கடன் வாங்கினார் என்பதை வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிக்கு உள்ளது. தாவா கடனுறுதிச் சீட்டு தகுந்த மறுபயனுக்கு ஏற்படவில்லை. இறந்துபோன என்.தனபால் என்பவரின் சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியால் இவ்வழக்கு தவறான நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 3, 4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல. இவ்வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. எனவே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5) வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன :-

1) தாவா கடனுறுதிச் சீட்டை இறந்துபோன என்.தனபால் என்பவர் வாதிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்தாரா?
2) தாவா கடனுறுதிச் சீட்டு உண்மையானதா? செல்லத்தக்கதா? மற்றும் மறுபயனுடையதா?
3) தாவா கடனுறுதிச் சீட்டு போலியாது என பிரதிவாதி போலியானது என பிரதிவாதிகள் கூறுவது சரியா?
4) வாதிக்கு கிடைக்கக்வடிய இதர பரிகாரம் என்ன?

6) இவ்வழக்கு விசாரணையின் போது, வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டு எழுதியதும், சாட்சியுமான கார்த்திகேயன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.4 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணம் எதுவும் முன்னிடப்படவில்லை.

**<u>எழுவினாக்கள் 1 முதல் 4</u>** :

7) இரு தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் மகனும், 2ம் பிரதிவாதியின் கணவரும், 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாருமான தனபால் என்பவரும், வாதியும் நெருங்கிய நண்பர்கள் எனவும், மேற்சொன்ன தனபால் என்பவர் தன்னுடைய அவசர குடும்ப செலவிற்காகவும், வியாபார செலவிற்காகவும் கடந்த 04.04.2019-ஆம் தேதியன்று ரூ.75,0,000/- வாதியின் வீட்ல் வைத்து ரொக்கமாக கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.25 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக் கொண்டு அன்றையதினமே மேற்சொன்ன தனபால் வாதி பெயருக்கு வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார் எனவும், மேற்சொன்ன கடன் தொகைக்கு கடந்த 30.09.2019-ஆம் தேதி வரையிலான வட்டியை மேற்படி தனபால் வாதிக்கு செலுத்திவிட்டார் எனவும், 01.10.2019 முதல் வட்டித் தொகை செலுத்திவில்லை எனவும், மேற்படி தனபால் பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு 23.10.2019 அன்று இறந்துவிட்டார் எனவும், மேற்படி தனபால் இறந்த பிறகு வாதி பலமுறை பிரதிவாதிகளை நேரில் சந்தித்து கேட்டும், பிரதிவாதிகள் தாவா கடனுறுதிச் சீட்டின்படி அசல் மற்றும் வட்டித் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதால் அத்தொகைகளை கேட்டு வாதி 26.02.2022 அன்று

வழக்குரைஞர் வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பினார் எனவும், வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் மூலம் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிறகும் பிரதிவாதிகள் எந்த தொகையும் செலுத்தவில்லை என்பது வாதி தரப்பு வழக்காகும்.

8) 1, 2 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றுக் கொண்டு வழக்குரைஞர் மூலம் ஆஜராகவில்லை. 3, 4 பிரதிவாதிகள் இளவர் என்பதால் இடைக்கால மனு எண்.3/2022-ல் 29.04.2022 அன்று பிறந்த உத்தரவுபடி நீதிமன்ற காப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். 3, 4 பிரதிவாதிகளுக்காக நீதிமன்ற காப்பாளர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் இறந்துபோன என்.தனபால் சாட்சி மற்றும் எழுத்தர் முன்னிலையில் தாவா கடனுறுதிச் சீட்டை எழுதிக் கொடுத்ததாக வாதி வழக்குரையில் குறிப்பிடவில்லை எனவும், தாவா கடனுறுதிச் சீட்டு உண்மையானது என நிரூபணம் செய்ய எவ்வித ஆவணங்களும் இல்லை எனவும், இறந்துபோன என்.தனபால் மேற்படி கடன் தொகையை கடன் வாங்கினார் என்பதை வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிக்கு உள்ளது எனவும், தாவா கடனுறுதிச் சீட்டு தகுந்த மறுபயனுக்கு ஏற்படவில்லை எனவும், இறந்துபோன என்.தனபால் என்பவரின் சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், வாதியால் இவ்வழக்கு தவறான நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 3, 4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல எனவும் எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

9) தாவா கடனுறுதிச் சீட்டில் உள்ள அசல் தொகை ரூ.7,50,000/-யை பெற்றுக் கொண்டு வாதி பெயருக்கு இறந்துபோன தனபால் தாவா கடனுறுதிச் சீட்டை எழுதிக் கொடுத்தார் என்பதை நிலைநாட்டி மெய்பிக்கும் ஆரம்பகட்ட கடமை வாதியை சார்ந்ததாகும். அதை மெய்பிக்கும் பொருட்டு வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். தாவா கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டை எழுதியதும், சாட்சியுமான கார்த்திகேயன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் இறந்துபோன தனபால் என்பவர் வாதியிடமிருந்து அவசர குடும்ப மற்றும் வியாபார தேவைக்காக ரூ.7,50,000/-யை கடந்த 04.04.2019 அன்று கடனாக பெற்றுக் கொண்டு, அதனை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.25 வீதம் வட்டி சேர்த்து செலுத்துவதாக ஒப்புக் கொண்டு வா.சா.ஆ.1 தாவா கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்துள்ளார் என சாட்சியமளித்துள்ளார்.

10) வா.சா.2 சாட்சியத்தில் வா.சா.1-ன் சாட்சியத்தை அனுசரித்து கடந்த 04.04.2019 அன்று என்.தனபால் வாதியிடமிருந்து ரூ.7,5,000/-யை தனது அவசர குடும்ப மற்றும் வியாபார

தேவைக்காக வா.சா.2 முன்ளிலையிலும், சாட்சி நல்லசிவம் முன்னிலையிலும் கடனாக பெற்றுக் கொண்டு அதனை வாதி சிவசாமி வேண்டும் போது திருப்பி தர ஒப்புக் கொண்டதுடன் அதற்கு ரூ.100/-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1.25 வீதம் வட்டி சேர்த்து செலுத்த ஒப்புக் கொண்டு ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்தார் எனவும், மேற்படி கடனுறுதிச் சீட்டை வா.சா.2 எழுதினார் எனவும், கடனுறுதிச் சீட்டுக்குண்டான விபரங்களை வாதியும், தனபாலும் சொன்னார்கள் எனவும், என்.தனபால் கடன் தொகையை பெற்றுக் கொண்டு அக்கடனுறுதிச் சீட்டினை படித்து பார்த்து பின்னர் 1 ரூபாய் ரெவின்யூ ஸ்டாம்பின் மீது ஒரு கையெழுத்தும், ஸ்டம்பிற்கு கீழே ஒரு கையெழுத்தும் செய்தார் எனவும், மேற்படி என்.தனபால் தாவா கடனுறுதிச் சீட்டில் கையொப்பம் செய்வதை வாதியும், வா.சா.2-ம் மற்றும் சாட்சியான கே.நல்லசிவமும் உடனிருந்து பார்த்தோம் எனவும், சாட்சி கே.நல்லசிவம் சாட்சி கையெழுத்து செய்து அவருடைய முகவரியை எழுதினார் எனவும், அதன் பின்னிட்டு மேற்படி புரோநோட்டினை எழுதியதும், சாட்சியுமான வா.சா.2 சாட்சி கையெழுத்திட்டு தனது முகவரியை எழுதினார் எனவும், மேற்படி புரோநோட்டில் மேற்சொன்ன தனபாலும், வா.சா.2-ம் மற்றும் சாட்சி நல்லசிவமும் அவரவர்களுடைய கையெழுத்திடுவதை முறையே வாதி மற்றும் தனபால் மற்றும் மேற்படி சாட்சிகளான நாங்களும் உடனிருந்து பார்த்தோம் எனவும் சாட்சியமளித்துள்ளது தெரிய வருகிறது. வா.சா.2-ன் சாட்சியத்தை உறுதிபடுத்தும் வகையில் வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டு அமைந்துள்ளது. எனவே வா.சா.1, வா.சா2 சாட்சியங்களிலிருந்து வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டை வாதி பெயருக்கு தனபால் என்பவர் எழுதிக் கொடுத்துள்ளார் என்பதை வாதி ஆரம்பகட்ட மெய்பிக்கும் கடமையை நிலைநாட்டியுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 118-ன்கீழான அனுமானம் வாதிக்கு ஆதரவாக எழுகிறது. அதனடிப்படையில் வா.சா.ஆ.1 தாவா கடனுறுதிச் சீட்டு மறுபயனுடையது என்ற சட்டப்பூர்வ அனுமானம் வாதிக்கு ஆதரவாக எழுகிறது. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118-ன்கீழான அனுமானம் அறுதியிட்ட அனுமானம் அல்ல, அது முரண்படுத்தக்கூடிய அனுமானம் ஆகும். எனவே வா.சா.ஆ.1 தாவா கடனுறுதிச் சீட்டு மறுபயனற்றது என்பதை மறுதலிக்கின்ற பொறுப்பு பிரதிவாதிகளை சென்றடைகிறது. அவ்வாறு மறுதலிப்பதை பிரதிவாதிகள் மேம்பட்ட நிலையில் தன்னுடைய சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும், வாதி தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும் பிரதிவாதிகள் தங்கள் தரப்பை மேம்பட்ட நிலையில் வெளிப்படுத்துவதன் மூலமும் மேற்சொன்ன சட்டப்பூர்வ அனுமானத்தை மறுதலிக்கலாம் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்ட நியதியாகும். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 118-ன்கீழ் வாதிக்கு ஆதரவாக எழுந்துள்ள சட்டப்பூர்வ அனுமானத்தை மறுதலித்து

மெய்பிக்கும் பொறுப்பு பிரதிவாதிகளை சென்றடைகிறது. ஆனால் 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தங்களுடைய சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும், வாதி தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும் பிரதிவாதிகள் தங்கள் தரப்பை மேம்பட்ட நிலையில் வெளிப்படுத்துவதன் மூலமும் வாதிக்கு ஆதரவாக எழுந்துள்ள சட்டப்பூர்வ அனுமானத்தை மறுதலித்து முரண்படுத்தவில்லை. எனவே தாவா கடனுறுதிச் சீட்டு மறுபயனற்றது என்பதை மறுதலிருக்கும் பொறுப்பலிருந்து பிரதிவாதிகள் தவறிவிட்டனர். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 118-ன்கீழ் வாதிக்கு ஆதரவாக எழுந்துள்ள சட்டப்பூர்வ அனுமானத்தை மறுதலிக்க பிரதிவாதிகள் தவறிவிட்டனர். எனவே வா.சா.ஆ.1 தாவா கடனுறுதிச் சீட்டு மறுபயனுடையது என்ற சட்டப்பூர்வ அனுமானம் வாதிக்கு ஆதரவாக இருந்து வருகிறது. மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் வா.சா.ஆ.1 தாவா கடனுறுதிச் சீட்டை இறந்துபோன என்.தனபால் என்பவர் வாதிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்துள்ளார் எனவும், தாவா கடனுறுதிச் சீட்டு உண்மையானது, செல்லத்தக்கது மற்றும் மறுபயனுடையது எனவும் முடிவு காணப்படுகிறது.

11) மேலும் வாதிக்கு தாவா தொகையை வட்டியுடன் பிரதிவாதிகள் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவர். தாவா கடனை 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனார் பெற்றுள்ளார். வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டின் பேரில் இளவர் 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக தனிப்பட்ட வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. இறந்துபோன தனபால் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களிலிருந்து தாவா கடனை வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவே இளவர்களின் நலன் பாதிக்கப்படவில்லை. எனவே வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டு மறுபயனுடையது என்பதால் வாதிக்கு தாவா தொகையை வட்டியுடன் பிரதிவாதிகள் இறந்துபோன தனபால் என்பவரின் ஆஸ்திகளிலிருந்து செலுத்தக் கடமைப்பட்டவர்கள் எனவும், வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கத்தது எனவும் எழுவினாக்கள் 1 முதல் 4-க்கு முடிவு காணப்படுகிறது.

முடிவில், வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.**10,30,645**/-மும், அதில் அசல் தொகை ரூ.**7,50,000**/-க்கு வழக்குரை தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை வருடம் ஒன்றுக்கு **7.5%** வட்டியும், தீர்ப்பாணை தேதிக்கு பிறகு முழுத்தொகையும் செலுத்தும் வரை வருடம் ஒன்றுக்கு **6%** பின்வட்டியும் இறந்துபோன என்.தனபால் என்பவரின் ஆஸ்திகளிலிருந்து பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால்

குறிப்பெடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20-ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

R SHANMUGA SUNDARAM

Digitally signed by R SHANMUGA SUNDARAM
DN: cn=R SHANMUGA SUNDARAM, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள்** :-

வா.சா.1 - சிவசாமி (வாதி)

வா.சா.2 - கார்த்திகேயன் (கடனுறுதிச் சீட்டு எழுதிய நபர்)

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்** :-

வா.சா.ஆ.1 - 04.04.2019 – வாதி பெயருக்கு என்.தனபால் என்பவர் எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டு அசல்.

வா.சா.ஆ.2 - 26.02.2022 – வாதி தனது வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு அலுவலக நகல்.

வா.சா.ஆ.3 - மேற்படி வழக்குரைஞர் அறிவிப்பை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (நான்கு எண்ணிக்கை) அசல்.

வா.சா.ஆ.4 - ம.சா.2-ன் ஆதார் அடையாள அட்டை புகைப்பட நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணம்** :- இல்லை.

R SHANMUGA SUNDARAM

Digitally signed by R SHANMUGA SUNDARAM
DN: cn=R SHANMUGA SUNDARAM, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**